பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 08 புதன்கிழமை 24.11.2021 கதிர் 247

## கிண்ணியா படகு விபத்து; மூவர் பொலிஸாரால் கைது

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் படகு விபத்துக்குள்ளானது தொடர்பில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞2

# நிலையான தீர்வைத் தேடுவதில் தமிழரோடு இணைகிறது அமெ.

## அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் இலங்கை விவகாரப் பிரதிநிதி தெரிவிப்பு

வொஷிங்டன், நவம்பர்24

"இலங்கை தொடர்பான அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிப்பதில் மனித உரிமைகள் விவகாரமே மையப்பொருளாக இருக்கின்றது. அங்கு நிலையான தீர்வைத் தேடுதல் ☞2






## தப்பியது கூட்டமைப்பின் பருத்தித்துறை நகர சபை

### தலைவரின் மேலதிக ஒரு வாக்கால் அடுத்த ஆண்டு 'பட்ஜட்' நிறைவேற்றம்

பருத்தித்துறை நகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் சபைத் தலைவரின் மேலதிக ஒரு வாக்கால் இன்று நிறைவேறியது.

சபையின் விசேட கூட்டம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமானபோது சபைத் தலைவர் யோசப் இருதயராஜ் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித் ☞2

## விபத்துக்களில் அறுவர் மரணம்

நாட்டின் ஐந்து இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் அறுவர் மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் இன்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக களுத்துறை, பதுருளிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திக்ஹேன வீதி, போல்லுன்ன பிரதேசத்தில், மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து எதிர்த் திசையில் வந்த லொறியொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் நாகொடை ☞2

## யாழ். மேயர் மணிவண்ணன் தலைமையில் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதி புனரமைப்பு தொடர்பாக மாநகர மேயர் வி.மணிவண்ணன் தலைமையில் மாநகர சபையில் இன்று விசேட கூட்டம் நடைபெற்றது.

இதில், யாழ். மாநகர சபையின் ஆணையாளர், பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை ☞2

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உப தவிசாளராக சுப்பிரமணியம் தெரிவு



(ந.லோகதயாளன்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சி.சுப்பிரமணியம் அமோக உறுப்பினர்களின் ஆதரவுடன் சபையால் இன்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உப தவிசாளரான மகேந்திரன் கடந்த ☞2





உத்தியோகபூர்வ விஜயமாக சென்னை சென்றிருக்கும் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சென்னையில் நேற்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவியையும், இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினையும் சந்தித்துப் பேசினார். இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைகள், முரண்பாடுகளுக்கான தீர்வு உட்பட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்புக்களின் போது பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.

## வவுனியாவில் நீரில் மூழ்கி சிறுவன் பரிதாப உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

வவுனியா - பாவற்குளத்தில் நீராடிய 4 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என உளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞2

## ஊடகச் சட்டத்தை திருத்தப்போகும் இலங்கை அரசு

இலங்கையில், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ☞2

## ஜேர்மனிய தூதுவருடன் ரெலோ தரப்பு தனியே சென்று ஒரு மணிநேரம் பேச்சு



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ஹோல்கர் ஸுபேர்ட், உதவித் தூதுவர் ஓலாப் மல்ஷோ ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ பேச்சு நடத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதரகத்தில் இன்று முற்பகல் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ☞2

### கிண்ணியா படகு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி மோட்டார் படகை இயக்கிய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறிஞ்சாக்கேணியில் நேற்று குறித்த படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 4 மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தமையுடன், 17 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், சம்பவம் குறித்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து, கிண்ணியா பொலிஸாரால் ஒருவரும், திருகோணமலை பொலிஸாரால் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### நிலையான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தங்களின் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு முழுக் குரல் கொடுக்கும் விடயத்தில் இலங்கைத் தமிழ்மக்களோடு அமெரிக்கா இணைகின்றது."

- இப்படி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இலங்கை விவகாரங்களைக் கையாளும் பொறுப்பதிகாரி தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் வெளிவிவகார அமைச்சில் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் டொனால்ட் லூவின் கீழ் இலங்கை விவகாரம் கையாளப்படுகின்றது.

அவரும், அவரது துணை அதிகாரியான கெலி அம்மையாரும் கடந்த திங்களன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டநிபுணர் குழுவுடனும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடிய பின்னர் அவரது அலுவலகம் விடுத்த உத்தியோக பூர்வ டுவிட்டர் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் கூட்டமைப்புக் குழு பங்குபற்றியது.

மேற்படி சந்திப்பு மீள் நல்லிணக்கம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டதாகவும் அந்த டுவிட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

நேபாளத்துக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு வொஷிங்டன் திரும்பியிருந்த காரணத்தினால் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு இந்தக் கூட்டத்தில் டொனால்ட் லூ நேரில் பங்குபற்றாமல் சூம் முறையில் கலந்து கொண்டார்.

### தப்பியது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

அதைப் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியதை அடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஆளும்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 5 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஆகியவற்றின் தலா ஒரு உறுப்பினருமான 7 பேரும் ஆதரவாகவும், எதிர்க் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஒரு உறுப்பினருமாக 7 பேர் எதிராக வாக்களித்தனர்.

மொத்தமாகவுள்ள 15 உறுப்பினர்களில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சமூகமளிக்காததால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கச் சபைத் தலைவருக்கு உள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய அவர் மேலதிக ஒரு வாக்கு அளித்தமையால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது.

### யாழ். மேயர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலிகொம் ஆகியவற்றின் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளும், ஸ்ரான்லி வீதி புனரமைப்பு செய்யும் ஒப்பந்தகார நிறுவனத்தினரும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒப்பந்தக்கார நிறுவனத்தினரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், மேற்படி திட்டத்தை வரும் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் முடிவுறுத்திக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதைக் குறைத்து வேகமாக செய்து முடிப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது.

ஸ்ரான்லி வீதியானது இருபக்கமும் வாகனத்தரிப்பிடம், வாய்க்கால், நடைபாதை, சுற்றுவட்டம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியவாறு புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### விபத்துக்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். பதுருளிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபரே உயிரிழந்தார்.

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவு, கொழும்பு - காலி வீதி, தோட்பல சந்திக்கு அருகில், பஸ்ஸொன்று பாதசாரி ஒருவர் மீது மோதியதில் பாதசாரி மரணமடைந்தார். அஸ்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே உயிரிழந்தார்.

கொழும்பு, நீர்கொழும்பு வீதி - வெலிகம்பிட்டிய பிரதேசத்தில் கொழும்பு நோக்கிப் பயணித்த கொள்கலனொன்று மோட்டார் சைக்கிளொன்றின் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். கனேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயது நபரே உயிரிழந்தார்.

பொலன்னறுவை, மனம்பிட்டிய வீதியில், டிப்பர் ரக வாகனமொன்று ஓட்டோ ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமடைந்துள்ளமையுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் ஓட்டோ சாரதியும், ஓட்டோவில் பயணித்த நபருமே உயிரிழந்தனர்.

குருநாகல், ஜயந்திபுர வீதி, படுமக பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று மின்சாரத் தூணொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரே உயிரிழந்தார்.

### வவுனியா தெற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் சுகயீனம் காரணமாக உயிரிழந்ததையடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட உப தவிசாளருக்கான தெரிவு இன்று காலைசபையில் போட்டிக்கு விடப்பட்டது.

இதன்போது, ஈரோஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தி சசிதரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக சி.சுப்பிரமணியமும் போட்டியிட்டனர்.

சி.சுப்பிரமணியத்துக்கு ஆதரவாக 16 வாக்குக்கள் கிடைக்கப்பெற்றன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஈரோஸ் அமைப்புக்கு மூன்று வாக்குக்கள் கிடைத்தன.

இன்று சபையின் 24 உறுப்பினர்கள் பிரசன்னமாகியிருந்தனர். அதில் 16 பேர் ஆதரவாக வாக்களித்தனர். ஐந்து பேர் நடுநிலையை வகித்தனர். ஐந்து பேர் சபைக்கு சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியாவில் நீரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூடுவெந்தபுலவு பகுதியில் வசித்து வரும் தாய் தனது பிள்ளைகளுடன் பாவற்குளம் குளத்தில் நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது 4 வயது சிறுவனைக் குளத்தில் நீராட விட்டு தாய் கரைக்கு வந்து திரும்பிப் பார்க்கும்போது, குளத்துக்குள் நீராடிக் கொண்டிருந்த சிறுவன் நீரில் மூழ்கியுள்ளார்.

இதையடுத்து தாயார் அங்கு நின்றவர்கள் மற்றும் ஊரவரை அழைத்து சிறுவனைத் தேடியபோது சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டதையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்துவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியைச் சேர்ந்த அம்ஜத் என்ற 4 வயது சிறுவனே மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஜேர்மனியத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், ஐ.நா. 46/1 பிரேரணை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படல், ஜி.எஸ்.பி. வரிச் சலுகைகள், தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்க முக்கிய பிரச்சினையான காணி அபகரிப்பு, இனக் குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ.நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவது, மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துவது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டன.

தமிழர்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகளை வலியுறுத்துவது, அதன் முக்கியத்துவம், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம், ஆதரவு தரப்புக்கள், எதிர்கால நகர்வுகள் என்பன பற்றியும் ரெலோ தரப்பால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடைபெற்றது.

### ஊடகச் சட்டத்தை ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில், ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்நாட்டுச் சட்டங்கள், சர்வதேச சட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இலங்கையில் ஊடகக் கொள்கையொன்றை தயாரிப்பது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது என ஊடக அமைச்சர் தெரிவித்தார்.

சமூக ஊடகங்கள் உட்பட்ட ஊடகங்களின் பயன்பாடு மற்றும் நடத்தை பற்றிய தொழில்சார் திறன்கள் மற்றும் கல்வியுடன் கூடிய ஊடகவியலாளர்களுக்கான பின்னணியை உருவாக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, ஊடகம், சந்தைப்படுத்தல், கல்வி, சட்டம், நிர்வாகம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் அனுபவமுள்ளவர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்காக ஊடகத்துறை அமைச்சரால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆட்சித் தரப்பின் வறட்டுப் பிடிவாதம்

**முன்னாள் இராணுவ அதிகாரி, இன்று நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி. அமைச்சுக்களின் செயலாளர்கள் பதவிகள் உட்பட பல சிவில் நிர்வாக அதிகாரிகள் கதிரைகளில் முன்னாள் படை அதிகாரிகள்.**

**பெயருக்கு என்னையோ இராணுவப்பாணி கெடுபிடி ஆட்சிப் பீடம் இது. ஆனால் இராணுவத்தில் வழமையாக இருக்கும் ஒழுங்கு முறைமை கூட இந்த ஆட்சிப் பீடத்தில் இல்லை.**

**முட்டாள்தனமான முடிவுகள், அபத்தமான தீர்மானங்கள் அர்த்தமற்ற பிடிவாத நடவடிக்கைகள் என்று இந்த ஆட்சியின் கோமாளித்தனம் தொடர்கின்றது.**

**அதிகாரத்துக்கு வந்து இரண்டு வருடங்களிலேயே இந்த ஜனாதிபதியின் திறமை, சாதுரியம், அரசியல் தீர்க்கதரிசனம், நிர்வாக வலிமை பற்றிய எல்லாம் அம்பலமாகிவிட்டன.**

**குறுகிய காலத்தில் பெரும் செல்வாக்கைச் சம்பாதித்து, மிகக் குறுகிய காலத்தில் அதனை இழந்த நாட்டுத் தலைவர் என்ற பதிவை அவர் வரலாற்றில் விட்டுச் செல்லப் போகின்றார் என்பது திண்ணம்.**

**இரசாயன உரப் பாவனை தொடர்பாக ஜனாதிபதியும், அவரது விவசாய அமைச்சரும், அரசுத் தரப்பினரும் எடுத்த முடிவுகள், தீர்மானங்கள், நடவடிக்கைகள் யாவும் அபத்தத்திலும் அபத்தம்; வேடிக்கையிலும் வேடிக்கை.**

**இரசாயன உரங்கள், அசேதனப் பசளைகள், இரசாயன பீடை கொல்லிகள் போன்றவற்றால் மனிதனுக்கும் சுற்றுச் சூழலுக்கும் கடும் பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். பசுமை விவசாய முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதும் நியாயமானதுதான்.**

**ஆனால், அது தொடர்பான முடிவும், தீர்மானங்களும் விஞ்ஞானபூர்வமாக அணுகி எடுக்கப்பட வேண்டும். சாத்தியப்பாடுகள், யதார்த்தங்கள் குறித்து நிபுணத்துவ ரீதியில் ஆராய்ந்து, தீர்க்க தரிசனத்தோடு தீர்மானங்கள் எட்டப்பட வேண்டும்.**

**வெறுமனே அரசியல் சித்து விளையாட்டுப் போல 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற மாதிரி முடிவுகள் எடுக்கப்பட முடியாது; எடுக்கப்படக் கூடாது.**

**உலகின் எந்த ஒரு நாடும், அசேதன உரங்களுக்கும் இரசாயன களைகொல்லிகள், பசளைகளுக்கும் திடீரென ஒரே நாளில் தடை விதிக்கவில்லை. அப்படிச் செய்வது சாத்தியமற்றது. மெல்ல, மெல்ல – ஒரு நீண்ட கால வரையறை வைத்து – கொஞ்சம் கொஞ்சமாக – அத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். அதுவே சாத்தியமானது என்று நிபுணர்களும் அதிகாரிகளும், துறைசார் வல்லுனர்களும் ஆலோசனை வழங்க, வழமை போல அவற்றைத் தூக்கிக் கடாசி விட்டுத் தம்பாட்டில் ஒரேயடியாகத் தடை செய்யும் முடிவை எடுத்து, அறிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**எந்த எதிர்ப்பு வந்தாலும் இந்த முடிவில் மாறமாட்டோம் என்று சூளுரைத்த ஜனாதிபதியும் விவசாய அமைச்சரும் யதார்த்தம் புரிந்து கையைச் சுட்டுக்கொண்ட பிறகு இப்போது வேறு வழியின்றி இறங்கி வரவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.**

**அதனால் இரசாயன உர இறக்குமதிக்கான தடை நீக்கப்படுகின்றது. தனியார் தேவையான அளவு இரசாயன உரத்தை இறக்குமதி செய்யலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியினதும் விவசாய அமைச்சரினதும் வறட்டுப் பிடிவாதம் – அபத்த முரட்டுப் போக்கு – முழுத் தோல்வி கண்டு விட்டது என்பதன் வெளிப்பாடுதான் இது.**

**விவசாயிகளின் ஒரு பெரும்போகச் செய்கையை நாசமாக்கி, நாட்டின் கமத்தொழில்துறையை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தி, நாட்டுக்குப் பெரும் நிதி நெருக்குவாரத்தையும், உற்பத்தி இழப்பையும் ஏற்படுத்தி நிற்கின்றது இவர்களின் இந்த வறட்டுப் பிடிவாதம்.**

# நவ. 27 ஆம் திகதி மாவீரர்களை நினைவிற்கொள்வது நம் கடமை

## நேரத்தை கருத்திற்கொள்ளாது செயற்படக் கோருகிறார் சிவாஜி



குறித்த நேரத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாது நவம்பர் 27 நாளிலே மாவீரர்களை நினைவு கூருவது நமது கடமையாகும். இதற்கு அரசியல்வாதிகளும் அரசியல் பிரதிநிதிகளும் முன்னின்று செயற்பட வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று (செவ்வாய்க் கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் கூறுகையில்–

மாவீரர் நாளை அனுஷ்டிப்பது தொடர்பாக இலங்கை அரசு, பொலிஸார் ஊடாகவும் படையினர் ஊடாகவும் நீதிமன்றங்களை அணுகி, வடக்கு– கிழக்கு மாகாணங்களில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தச் சூழல் பின்னணியிலேயே, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவு கூர முற்படுகின்றார்கள் எனக் கூறி, எங்கள் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தடை உத்தரவுகளைப் பெற்றிருக்கிறார்கள். சில நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க மறுப்பு தெரிவித்து இருக்கின்றன.

மேலும், மாவீரர் நினைவு தினங்கள் இடம்பெறும் துயிலுமில்லங்கள் தற்போது இராணுவ முற்றுகைக்குள் காணப்படு கின்றன. இந்நிலையில் தீருவில் பொது பூங்காவில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்து வதற்கான அனுமதியை வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரிடம் கேட்டிருக்கின்றோம். அந்த அனுமதி கிடைத்தவுடன் சுகாதார துறையின் அனுமதியுடன் நவம்பர் 27 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை இந்த நிகழ்வுகளை நடத்துவதற் கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

குறிப்பாக அரசியல் செயற்பாட்டாளர்களும் அரசியல் பிரதிநிதிகளும் இதில் மௌனமாக இருக்காது, துணிந்து பொது இடங்களிலும் ஆலயங்களிலும் அஞ்சலியைச் செய்ய முன்வர வேண்டும். – என அவர் குறிப்பிட் டுள்ளார்.



# வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் பாதீடு 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை வலி.மேற்கு–சுழிபுரம் பிரதேச சபையின் வரவு–செலவுத்திட்டக் கூட்டம், தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தலைமையில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.


இதன்போது தவிசாளரால் வரவு–செலவுத் திட்ட முன்மொழிவுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, வரவு–செலவுத்திட்டத்தின் மீதான விவாதங்கள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து வரவு–செலவுத் திட்டம், வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 18 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற் றப்பட்டது. 25 உறுப்பினர்களை கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 5 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும் மற்றும் சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்கள் உள்ளடங்களாக 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப் பினர், வரவு – செலவுத்திட்டத்துக்கு எதிராக வக்களித்த அதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு உறுப் பினரும் சபை அமர்வில் கலந்துகொள்ளவில் லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்களின் பாதுகாப்புக்கே அரசாங்கம் முன்னுரிமையளிக்கும்

## பிரதமர் திட்டவட்டம்



பொதுமக்களின் பாதுகாப்பிற்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்குமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கான ஆரம்ப அறிக்கையை வெளியிட்ட பிரதமர், புதிய அரசமைப்புக்கான வரைவு தற்போது வகுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவாதத்துக்கு முன்வைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்பதாகவும் மக்கள் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்கள் உரிய நேரத்தில் எட்டப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும் அதற்கமைவாக குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்களுடன் கூடிய வரவு– செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்தார் எனவும் அவர் தெரி வித்தார்.

# மெய்நிகர் உச்சிமாநாட்டில் பங்கெடுக்க பைடன் அழைப்பு; சீனா புறக்கணிப்பு



ஜனநாயகம் குறித்த மெய்நிகர் உச்சி மாநாட்டில் பங்கெடுக்க 110 நாட்டு பிரதிநிதிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் முக்கிய மேற்கத்திய நட்பு நாடுகள் உட்பட ஈராக், இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அமெரிக்காவின் பிரதான போட்டியாளரான சீனா, தாய்வான் போன்ற நாடுகளுக்கு ஜோ பைடன் அழைப்பு விடுக்கவில்லை. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பீஜிங்கை மேலும் கோபப்படுத்தும் சூழ்நிலையினை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் டிசெம்பர் 9 தொடக்கம் 10ஆம் திகதிகளில் திட்டமிடப்பட்ட இணையவழி மாநாட்டில் இஸ்ரேல் மற்றும் ஈராக் மட்டுமே மத்திய கிழக்கு நாடுகள் என்ற வகையில் பங்கெடுக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைப் போலவே நேட்டோவில் உறுப்பினராக உள்ள துருக்கியும் பங்கேற்பாளர்களின் பட்டியலில் இணைக்கப்படவில்லை. மேலும் அமெரிக்காவின் பாரம்பரிய அரபு நட்பு நாடுகளான எகிப்து, சவுதி அரேபியா, ஜோர்தான், கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் என்பனவும் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கேரியாவில் தீப்பற்றிய பேருந்து; 45 பேர் உயிரிழப்பு!




பல்கேரியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலை யொன்றில் பயணித்த பேருந்து தீப்பிடித்ததில் குறைந்தது 45 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை போஸ்னெக் கிராமத்திற்கு அருகே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 12 குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் என அமைச்சக அதிகாரி நிகோலாய் நிகோலோவ், தனியார் தொலைக் காட்சி சேவையான டீவுஏ இடம் தெரிவித்துள்ளார். விபத்திலிருந்து 7 பேர் காப்பாற்றப்பட்டனர் எனவும் கூறப்படுகின்றது.

துருக்கியில் இருந்து வடக்கு மாசிடோனியா நோக்கி குறித்த பேருந்து பயணித்ததாக நம்பப்படுகின்றது.

# பிரான்ஸ் பிரதமருக்கு கொவிட் தொற்று உறுதி



பிரான்ஸ் பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் கொரோனா வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்தார் என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. பெல்ஜிய பிரதமர் அலெக்சாண்டர் டி குரூவை சந்தித்த சில மணி நேரங்களுக்குப் பிறகு 56 வயதான பிரதமரின் நேர்மறை கொவிட் சோதனை அறிவிக்கப்பட்டது.

பிரஸ்ஸல்ஸில் உள்ள எக்மாண்ட் அரண்மனைக்குள் முகக்கவசங்கள் இல்லாமல் இருவரும் அருகருகே நிற்பதை படங்கள் காட்டின. இருப்பினும் அவர்கள் ஒருவருக்கொருவர் இடைவெளியை கடைப்பிடித்தனர்.

அதேவேளை வெளியில் ஒருவரையொருவர் தழுவி வரவேற்றபோது இருவரும் முகக்கவசங்கள் அணிந்திருந்தனர். முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட காஸ்டெக்ஸ், 10 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்படுவார் என்று பிரான்ஸின் பொது ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவரது 11 வயது மகள் வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்தமையை அடுத்து, பிரதமர் ஏற்கனவே திங்களன்று தனிமைப்படுத்தபட்டார். இது காஸ்டெக்ஸை தொடர்புகொண்டநபராக மாற்றியது.

12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு ஐரோப்பிய மருந்துகள் முகவரகம் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால், இந்த வாரம் ஒரு முடிவை எட்டலாம் என்று கூறியுள்ளது.

# தாய்லாந்து எல்லையில் கடத்தலில் ஈடுபட்ட 68 பேர் கைது

மலேசிய- தாய்லாந்து எல்லையில் கடத்தல் செயல்களில் ஈடுபட்டனர் என சந்தேகிக்கப்பட்ட நான்கு பெண்கள் உள் பட 68 பேரை மலேசிய பொது நடவடிக்கைகள் படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 17ஆம் திகதி முதல் நவம்பர் 17ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட OeratioI Benteng எனும் தேடுதல் நடவடிக்கைகளின் கீழ் இவர்கள் அனைவரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் மலேசியா மற்றும் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் என கட்டளை அதிகாரி அசிசன் யூசப் தெரிவித்திருக்கிறார்.

கடத்தல் செயல்களில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட 52 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒரு மாத நடவடிக்கைகளின் மூலம் சுமார் 6 கோடி இந்திய ரூபா செய்யப்பட்டுள்ளன(35 லட்சம் மலேசிய ரிங்கட்டுகள்) மதிப்பிலான பொருள்களும் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலான கடத்தல்காரர்கள் தாய்லாந்தின் எல்லையோர பகுதிகளான Pasir Mas, Rantau Panjang, Tanah Merah, Tumpat ஆகிய மலேசியப் பகுதிகளில் கைது செய்யப்பட்டனர் என கட்டளை அதிகாரி அசிசன் யூசப் கூறியிருக்கிறார்.

# தடுப்பூசி செலுத்தியவர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் தடையின்றி வரலாம்


கொரோனா வைரஸுற்கெதிரான தடுப்பூசியின் இரண்டு அளவுகளையும் செலுத்தியவர்கள் முறையான விசா வைத்திருந்தால், விலக்கு கேட்டு விண்ணப்பிக்காமல் ஆஸ்திரேலியா விற்கும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி முதல் தடையின்றி வரலாம் என பிரதமர் ஸ்கொட் மோரிஸன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'தொழிலாளர்கள், மாணவர்கள், மனிதநேயத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், விடுமுறைக்கு வருபவர்கள், குடும்ப விசா வைத்திருப்பவர்கள் தகுதியான விசா வைத்திருந்தால் தடையின்றி வரலாம். தகுதியான விசா வைத்திருக்கும் மாணவர்கள், தொழிலாளர்கள், மனிதநேய ஆர்வலர்கள், விடுமுறைக்கு வரும் பயணிகள், குடும்பத்துடன் வருவோர் அனைவரும் தகுதியான விசா வைத்திருத்தல் போதுமானது.

ஆஸ்திரேலிய மருந்து நிர்வாக அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியை முழுமையாகச் செலுத்தியிருக்க வேண்டும். விசாவுக்கு விண்ணப்பிக்கும் போது தடுப்பூசி சான்றிதழ், பயணத்துக்கு 3 நாள்களுக்கு முன் எடுக்கப்பட்ட கொவிட் பரிசோதனையில் கொவிட் எதிர்மறை சான்று ஆகியவற்றை வழங்க வேண்டும். தொழிலாளர்கள், வெளிநாட்டு மாணவர்கள் ஆகியோர் நாட்டின் பொருளாதாரம் மேம்படுவதற்கு உதவி செய்யக் கூடியவர்கள், எங்கள் கல்வித்துறைக்கு ஆதரவு வழங்கக் கூடியவர்கள்' என கூறினார்.



# தமிழகத்துக்கு வரும் வெளிநாட்டினருக்கு 2 டோஸ் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டது



வெளிநாடுகளில் இருந்து தமிழகத்துக்கு வருவோர் 2 டோஸ் தடுப்பூசியுயம் செலுத்தியிருக்கவில்லை என்றால் கட்டாயம் கொரோனாப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்எனதமிழகபொதுசுகாதாரத்துறைஅறிவித்துள்ளது.

லண்டன், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், சீனா, நியூசிலாந்து, சிங்கப்பூர், பிரேஸில், மொரீசியஸ், சிம்பாப்வே போன்ற நாடுகளில் இருந்து தமிழகத்துக்கு வரும் நபர்கள் கட்டாயம் இரண்டு டோஸ் தடுப்பூசியையும் செலுத்தியிருக்க வேண்டும் என தமிழக அரசு கூறியுள்ளது.

ஒரு டோஸ் தடுப்பூசி மட்டுமே செலுத்தியிருந்தாலும், தடுப்பூசி செலுத்தாவிட்டாலும் 72 மணி நேரத்திற்கு முன்பு கொரோனாப் பரிசோதனை மேற்கொண்ட சான்றிதழ் அவர்களிடம் இருக்க வேண்டும் என்றும், அதில் கொரோனா நெகட்டிவ் என்று இருந்தால் மட்டுமே தமிழகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெற்றோல், டீசல் வரியை குறைக்கவும்

## தமிழக அரசு மீது ஓ.பி.எஸ். விமர்சனம்



தமிழகத்தில் பெற்றோல், டீசல் மீதான வரியைக் குறைப்பது சாத்தியமில்லை என தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூறியிருப்பது வேதனை தருகிறது என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெற்றோல் , டீசல் மீதான மத்திய அரசின் வரி இந்தியாவில் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் என்ற நிலையில், பெரும்பாலான மாநிலங்கள் வரியைக் குறைத்திருக்கும் போது தமிழக அரசு மட்டும் இயலாது என கூறுவது நியாயமற்றது என தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் இந்த அறிவிப்பு அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது எனவும் ஓ.பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.



## திருப்பதி சுவாமி தரிசனத்துக்கு முன்பதிவு செய்தவர்கள் ஆறு மாதத்துக்குள் திகதியை மாற்றிக்கொள்ளலாம்

கனமழை காரணமாக, திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு, தரிசனத்துக்காக முன்பதிவு செய்துவிட்டு செல்லமுடியாத பக்தர்கள், ஆறு மாதத்திற்கு வேறு திகதி மாற்றி அனுமதிச்சீட்டினைப் பெற்று தரிசனம் செய்யும் விதமாக திருப்பதி தேவஸ்தான இணையத்தளத்தில் வசதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனமழையால், திருப்பதி செல்லும் மலைப்பாதை மற்றும் கோவில் வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்த நிலையில், தற்போது சீரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன.

இதனால் தரிசனத்துக்கு முன்பதிவு செய்துவிட்டு, நவம்பர் 18 ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதிக்குள் கோவிலுக்கு வரமுடியாதவர்கள், முன்பதிவுத் தினத்தை மாற்றிக்கொள்ளலாம் என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. முன்பதிவிற்கான திகதியை 6 மாதங்களுக்குள் மாற்றிக்கொள்ள தேவஸ்தான இணையத்தளத்தில் வசதி செய்து தரப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 25ஆம் திகதி முதல் மீண்டும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதால், பக்தர்களின் பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது 52 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து



கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின்தலைமையில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. 34,723 கோடி ரூபாவில் 52 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன என்று தகவல்கள் வெளியா கியுள்ளன. இந்த 52 புரிந்து ணர்வு ஒப்பந்தங்கள் மூலம் வரவுள்ள திட்டங்களால் 74, 835 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர், தூத்துக்குடி, ராணிப்பேட்டையில் அல்ட்ராடெக் நிறுவனம் சீமெந்து உற்பத்தி ஆலைகளை அமைக்க உள்ளது. கோவை, செங்கல்பட்டு, விருதுநகரில் டால்மியா நிறுவனம், சீமெந்து அரைத்தல் ஆலையை தொடங்க உள்ளது. கிருஷ்ணகிரியில் மின் வாகனங் களுக்கான கூடத்தை டி.வி.எஸ். மோட்டார் நிறுவனம் அமைக்கவுள்ளது.

வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையில் உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு 485 ரூபாவில் 7 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. கோவையில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு உதிரிப் பாகங்களுக்கான உற்பத்தி ஆலை அமைக்க ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள வான்வெளி, பாதுகாப்பு சார்ந்த தொழில் நிறுவனங்களின் கையேட்டையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் துறைகளுக்கான உற்பத்தியை மேம்படுத்த திறன்மிகு மையமும் அமைக்கப்படவுள்ளதாக

Personal English Classes



K Ganesh (BA.Pera)
தனியாக அவரவர் தரத்தில் இருந்து மேலே படித்தல் வகுப்பில் பேசுதல் தெளிவான கற்பித்தல் Grade 7- GCE OL AL
பட்டதாரிகள் , தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாதுகாப்பான மாற்றுப் போக்குவரத்து ஒன்று அமைக்காமையின் காரணமாகவே பேரனர்த்தம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு



கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலம் அமைத்தலின் போது பயணிகளுக்கென பாதுகாப்பான மாற்றுப் போக்குவரத்து ஒன்று அமைக்கப்படாமையின் காரண மாகவே பேரனர்த்தம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் இழுவை படகு கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

ஒரு லட்சம் மக்கள் வாழ்கின்ற கிண்ணியா பிரதேசத்திலே, நேற்று காலை துக்ககரமான அனர்த்தம் ஒன்று ஏற்பட்டு, இதுவரை 07 பேர் மரணமடைந்தனர் என நாம் அறிகின்றோம். அதில் ஒரே வீட்டிலே எட்டு வயது, ஆறு வயதை நிரம்பிய இரண்டு மாணவர்கள் உட்பட நான்கு மாணவர்களும், ஏனைய மூன்று நபர்களும் உயிரிழந்துள்ளார்கள்.

வீதி அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சர் ஜோன்ஸ்டன்பெர்னாண்டோ தற்போது இந்த சபையிலே இருக்கின்றார். கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலம் அமைக்க நீங்கள் எடுத்த முயற்சிக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும். ஒரு இலட்சம் மக்கள் வாழும் இந்தக் கிண்ணியா பிரதேசத்தில் ஒரு பாலத்தை நிர்மாணிப்பதாக இருந்தால், அந்தப் பக்கம் உள்ள 27 ஆயிரம் குடும்பங்களையும், இந்தப் பக்கத்தில் உள்ள 3 ஆயிரம் குடும்பங்களையும் இணைக்கும் அந்தப் பிரதேசத்தில், 11 பாடசாலைகளும் இருக்கின்றன என்பதை கவனத்திற் கொண்டும், ஒரு நாளைக்கு எட்டாயிரம் பேர் அதனூடாக பயணிகின்றனர் என்பதை கருத்திற்கொண்டு, மாணவர்கள் மற்றும் பயணிகளின் நலன்களை முன்னிறுத்தியும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அந்தப் போக்கு வரத்துக்கு மாற்றீடாக இன்னுமொரு தற்காலிகப் பாதையை அமைக்கும் வகையில், சாத்தியக் கூற்று அறிக்கைஒன்றைமேற்கொண்டபின்னரே, அதன் பணிகளை தொடங்கியிருக்க வேண்டும், அண்மையிலே, கொழும்பிலே பாரிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மாதிரி வரைபடம் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்ததை நான் கண்ணுற்றேன். எனவே, கிண்ணியா குறிஞ்சாக்கேணி போக்குவரத்திலும் ஒரு தற்காலிக மாற்று ஏற்பாடொன்றை மேற்கொண்டிருந்தால், இந்த அனர்த்தத்தை தவிர்த்திருக்க முடியும். எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது அதிகாரிகள் இதற்கு யார் பொறுப்பு? என கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கிண்ணியா பெற்றோர்கள், தமது பிள்ளைகளை இழந்து மிகவும் வேதனையில் தவிக்கின்றனர். எனவே, இந்தச் சம்பவத்தின் பொறுப்பதாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதோடு மாத்திரமன்றி, அவசர அவசரமாக பாதுகாப்பான மாற்றீட்டு போக்குவரத்து ஒழுங்கொன்றையும் மேற்கொள்ளவேண்டும் என்பதுடன், இந்தப் பாலத்தை அமைப்பதற்கு உடனடி நிதி ஒதுக்கீட்டினை செய்து, அவசரமாக இதன் பணிகளை நிறைவுக்கு கொண்டுவர வேண்டும். என்று கூறினார்.



# குறிஞ்சாக்கேணியின் படகு சேவையில் பாதுகாப்புக் கவசங்கள் பயன்படுத்தவில்லை

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு சேவையில் சிறுவர்களை அழைத்துச் செல்லும் வேளையில் உயிர் பாதுகாப்பு கவசங்களை பயன்படுத்தவில்லை, இது சட்டவிரோதமான செயற்பாடு மட்டுமல்ல நாட்டின் சட்டத்திற்கு அமைய இது கொலை.

ஆகவே இந்த மரணங்களை நாம் கொலையாகவே கருதுகின்றோம், இதனுடன் தொடர்புபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்போம் என ஆளுந்தரப்பு பிரதம கொரடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் ஆறுபேர் உயிரிழந்துள்ளனர், இது குறித்தும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அசம்பாவிதத்தையும் எமது தலையில் சுமத்தவே இவர்கள் முயற்சிக்கின்றனர். இந்த பாலத்திற்கு அடிக்கல் நாட்டியது நல்லாட்சியாகும்.

மதிப்பீடு செய்யாது, கேள்வி மனுக்கோரல் விடாது அடிக்கல் நாட்டினர். நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் மதிப்பீடுசெய்து, கேள்வி மனுக்கோரலுக்கு விடப்பட்டு பாலத்தில் ஒரு பகுதியை புனரமைக்கவும் மக்களின் பாவனைக்கு விட வெகு விரைவில் திருத்த நடவடிக்கை எடுத்தோம். ஜூலைமாதம் இது குறித்து இம்ரான் மஹ்ரூப் எம்.பி கேள்வியும் எழுப்பியிருந்தார்.

அதுமட்டுமல்ல பால திருத்தப் பணிகள் காரணமாக மாற்று வீதியும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் மாற்று வீதி 3 கிலோமீற்றர் தூரம். ஆகவே மக்கள் அந்த மாற்றுப் பாதையை பாவிக்க விரும்பவில்லை. அதேபோல் படகு சேவையும் மாநாகரசபை மூலமாகவே இயங்கியுள்ளது. கிண்ணியா நகரசபையில் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தி அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தான் ஆட்சி அமைத்துள்ளது. அவர்கள் தான் படகு சேவைக்கும் அனுமதி வழங்கியுள்ளனர். ஆகவே எம்மீது குற்றம் சுமத்த வேண் டாம். அதேபோல் படகு சேவையில் சிறுவர்களை அழைத்துச் செல்லும் வேளையில் உயிர் பாதுகாப்பு கவசங்களை பயன்படுத்தவில்லை, இது சட்டவிரோதமான செயற்பாடு, ஆகவே நாட்டின் சட்டத்திற்கு அமைய இது கொலை, இதனை அரசியல் பக்கம் திருப்ப வேண்டாம், அதேபோல் எம்மீது பழி சுமத்தவும் வேண்டாம். நல்லாட்சி அரசாங்கத்தில் இதற்கு தீர்வு வழங்க முடியவில்லை, நாம் முன்வந்து இவற்றை திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எவ்வாறு இருப்பினும் இந்த செயற்பாடு கொலையாகும். யார் பேசினாலும் இழப்புக்கு ஈடு இல்லை. யார் குற்றம் செய்திருந்தாலும், அவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது திட்டமிட்ட கொலை என்பதே எமது நிலைப்பாடு என்றார்.

# வெள்ளைக்கொடி பறக்கவிட்டு துக்கதினம் அனுஷ்டிப்பு

## வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதிகளில்



வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதான வீதிகளில் வர்த்தக சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்று கிண்ணியா – குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற சம்பவத்திற்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் பிரதான வீதியில் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் நேற்று படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தினைத் தொடர்ந்து துக்கதினமாகப் பிரகடனப்படுத்தி வாழைச் சேனை, ஓட்டமாவடி வர்த்தக சங்கங்களினால் வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதான வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் மரணமடைந்தவர்களுக்காகவும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்காகவும் பிரார்த்தனைகளில் அனைவரையும் ஈடுபடுமாறும் வாழைச்சேனை, ஓட்டமாவடி வர்த்தக சங்கங்களின் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# வாழைச்சேனையில் இரத்ததான முகாம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் என்பவற்றின் ஏற்பாட்டில் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் இரத்ததான முகாம் இன்று இடம்பெற்றது. கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம். பஷீல் தலைமையில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் இளைஞர், யுவதிகள், அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஷீல் தெரிவித்தார்.

# டெஸ்ட் போட்டியில் ஷ்ரேயாஸ் அய்யர் அறிமுகம் உறுதிப்படுத்திய இந்திய அணித்தலைவர் ரகானே






இந்தியா– நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் கான்பூரில் நாளை தொடங்குகிறது.

இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் விராட் கோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதால், ரகானே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ரோகித் சர்மா, பும்ரா, ரிஷப் பண்ட், மொஹமட் ஷமி ஆகியோருக்கும் ஓய்வு அளிக்கப்பட் டுள்ளது. கே.எல். ராகுல் காயத்தால் வெளியேறிவிட்டார்.

இதனால், வழக்கமான இந்திய டெஸ்ட் அணியில் இடம்பெறும் மூன்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களும் அணியில் இல்லாத நிலையில், அவர்களுக்குப் பதிலாக விளையாடும் பதினொருவரில் யாரேல்லாம் இடம்பெறுவார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிராக நாளை தொடங்கும் முதல் போட்டியில் ஷ்ரேயாஸ் அய்யர் அணியில் இடம் பெறுவார் என ரகானே உறுதிப்படுத்தியுள்ளார். மும்பையைச் சேர்ந்த ஷ்ரேயாஸ் அய்யர் இந்தப் போட்டியின் மூலமே இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆகவுள்ளார். இவர், முதல்தர கிரிக்கெட்டில் 52.18 என்ற சராசரியில் 4,592 ஓட்டங்களை எடுத்துள்ளார். ஷுப்மான் கில், மயங்க் அகர்வால் ஆகியோர் இந் திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மன்செஸ்டர் யுனைடெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் மாற்றம்



தொடர் தோல்விகள் காரணமாக மன்செஸ் டர் யுனைட்டெட் அணியின் தலைமைப் பயிற் சியாளரை அணி நிர்வாகம் மாற்றியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள புகழ்பெற்ற கால் பந்தாட்டக் கழகங்களில் ஒன்றான மன்செஸ்டர் யுனைட்டெட் அணியின் தலைமைப் பயிற்சி யாளராக நோர்வே நாட்டின் முன்னாள் வீரரான குனர் சோல்ஸ்க்ஜர் கடந்த 3 ஆண்டு களாக பணியாற்றி வந்தார். இந்த சீசனுக்கான பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் யுனைட் டெட் அணி ஆடிய 7 ஆட்டங்களில் 5 இல் தோல்வி அடைந்தது.

இதனால் அதிருப்திக்குள்ளான அணி நிர்வாகம் சோல்ஸ்க்ஜரை பதவியில் இருந்து தடாலடியாக நீக்கியது. அவரது பயிற்சிக் குழுவில் இருந்த மைக்கேல் காரிக் தற்காலிகப் பயிற்சியாளராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## மகளிர் டென்னிஸ் தரவரிசை ஆஷ்லே பார்ட்டி முதலிடம்

சர்வதேசடென்னிஸ்சங்கம்,மகளிர்டென்னிஸ்வீராங்கனைகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி 7,582 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். பெலாரசின் சபலென்கா 6,380 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் ஸ்பெயினின் கார்பைன் முகுருசா 5,685 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலுமுள்ளனர்.

கடந்த வாரம் குவாடலஜாராவில் நடைபெற்ற டென்னிஸ் தொடரில் வெற்றிபெற்ற ஸ்பெயினின் கார்பைன் முகுருசா, கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தார். இதன் மூலம் புள்ளிப்பட்டியலில் முன்னேறி மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார். மற்றொரு ஸ்பெயின் வீராங்கனை பௌலா படோசா புள்ளிப்பட்டியலில் முன்னேற்றம் கண்டு எட்டாவது இடத்துக்கு வந்துள்ளார்.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றியை அண்மிக்கும் இலங்கை

இலங்கையணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தி யத் தீவுகள் அணி தோல்வியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் இலங்கையணி தனது முதல் இன்னிங்ஸில் 386 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, மத்திய தரவரிசை வீரர்களின்அடுத்தடுத்தஆட்டமிழப்புகளால்தடுமாறினாலும்பின்வரிசைத்துடுப்பாட்ட வீரர்களின் உதவியோடு 230 ஓட்டங்களைச் சேர்த்தது. இலங்கையணியின் பிரவீன்ஜயவிக்ரம4விக்கெட்டுக்களையும்ரமேஸ்மென்டிஸ்3விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். அடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய இலங்கையணி, 191 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து மொத்தமாக 347 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தபோது தனது இன்னிங்சை முடித்துக் கொண்டு மேற்கிந்தியத் தீவுகளைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. முதல் இன்னிங்ஸில் சதமடித்த இலங்கையணித்தலைவர் திமுத் கருணாரத்ன இரண்டாவது இன்னிங்ஸில் 83 ஓட்டங்களை எடுக்க, அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தனது இரண்டாது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி மிக வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 52 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருக்கிறது. இலங்கையணியின் ரமேஸ் மென்டிஸ் 4 விக்கெட்டுக்களையும் லசித் எம்புல்தெனிய 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.



# கிளிநொச்சியில் தொடரும் வீதி விபத்துக்கள் உடன் நடவடிக்கை எடுத்து செயற்படுத்துக!

## வடக்கு ஆளுநருக்கு சிறிதரன் எம்.பி. கோரிக்கைக் கடிதம்




கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அண்மைக்காலமாக தொடர் வீதிவிபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என அனைவரும் பாதிக்கப்படுகின்றமை மிகவும் வேதனை தருகின்றது. கிளிநொச்சிப் பகுதியில் சரியான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநருக்குக் கோரிக்கை முன்வைத்துள்ளார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

அவரால் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த 2021.11.15 ஆம் திகதி காலை, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு (தேசிய பாடசாலை) முன்பாக உள்ள பாதசாரிகள் கடவை மூலம் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வருகைதந்த அரச பஸ் கட்டுப்படுத்த முடியாத கடும்வேகத்தால், ஊற்றுப்புலம் பிரதேசத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியான செல்வி மதுசாளினி திருவாசகம் (வயது – 17) பலியானமையோடு, அவருடன் இணைந்து பயணித்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியான செல்வி கீர்த்தனா சசிக்குமார் (வயது – 17) படுகாயமடைந்தமையை அனைத்துத் தரப்பினரிடையேயும், அதிலும் குறிப்பாக பெற்றோர்களிடையே ஆழ்ந்த துக்கத்தையும், அச்ச நிலையையும் தோற்றுவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின், பொருண்மியம் நலிந்த கிராமமான ஊற்றுப்புலத்தில் பிறந்து, வளர்ந்து, விறகு வெட்டி விற்றுப் பிழைக்கும் ஏழைத் தந்தையின் நிலையுணர்ந்து, க.பொ.த. சாதாரண தரத்தில் திறமைச் சித்திபெற்ற மாணவியான செல்வி மதுசாளினி திருவாசகம், போக்குவரத்து வசதி, மேலதிக வகுப்புக்கள் உள்ளிட்ட தேவைப்பாடுகளின் நிமித்தம் உயர்தரம் குறித்தான எண்ணற்ற கனவுகளோடு நகர்ப்புறப் பாடசாலை நோக்கி அனுமதிக்காக வந்த அன்றே, பாதசாரிகள் கடவையில் வைத்துப் பலியாகியிருக்கும் சம்பவம் மிகவும் பாரதூரமானது.

இந்த மாணவியின் உயிர்ப்பலிக்கு பஸ் சாரதியின் அதிகரித்த வேகமும், மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்ட பொறுப்பற்ற தன்மையுமே காரணம் என்பதை வெளியாகியுள்ள மறைகாண் ஒளிப்பதிவுக் காணொலிகள் மூலம் அறிய முடிகிறது.

எதிர்காலம் தொடர்பான ஏராளமான கனவுகளோடு உயர்தரக் கல்விக்காக கிளிநொச்சி நகரை நோக்கி அடியெடுத்து வைத்த அன்றையதினமே, உயிரிழந்த அந்த மாணவியின் உயிரை மீட்கவோ, எண்ணிலடங்கா இடர்பாடுகளுக்குள்ளும் தம் பிள்ளையை வளர்த்து, கனவுகளோடுகாத்திருந்தபெற்றோருக்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பை ஆற்றுப்படுத்தவோ எம்மால் முடியாவிட்டாலும், இன்னொரு பிள்ளைக்கும், அந்தப் பிள்ளையின் குடும்பத்துக்கும் இத்தகு துயர்தோய்ந்த நிலை ஏற்படாதிருப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய சமூகக் கடமை எம் எல்லோருக்கும் உள்ளது என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளது.

கடந்த 2016-07-25 ஆம் திகதியன்று காலை 07.15 மணியளவில் கிளிநொச்சிமத்தியஆரம்பவித்தியாலயத்தில் தரம் – 03 இல் கல்வி பயின்ற மாணவனான செல்வன் ஜீவன் அகரன் (வயது –08) போக்குவரத்துப் பொலிஸார் முன்னிலையில், பாதசாரிகள் கடவையால் வீதியைக் கடக்க முற்பட்ட போது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி, தலைப்பகுதியில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, உடனடியாகவே அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். ஒரு மாதத்துக்கு மேலாக உணர்திறனற்ற (கோமா) நிலையில் சிகிச்சைபெற்ற அவர், இன்றும் இயல்புக்குத் திரும்பமுடியாத நிலையிலேயே வாழ்ந்து வருகிறார்.

அதே பாதசாரிகள் கடவையில் சைக்கிளோடு வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் மீது அதிவேகமாக வந்த அரச பஸ் மோதியதில் கடந்த 20-07-23 அன்று படுகாயமடைந்த முதியவர் ஒருவர், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு, சிகிச்சை பலனளிக்காது 2020-07-24 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

கடந்த 2020-08-24 ஆம் திகதியன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலத்தில் (தேசிய பாடசாலை) கல்வி கற்கும் தனது பிள்ளைகளை ஏற்றிவருவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற திருமதி தசாயினி விக்னேஸ்வரன் என்பவர் மீது பாடசாலைக்கு முன்பாக, அதிகரித்த வேகத்தில் வந்த இராணுவ வாகனம் மோதியதில் அவர் படுகாயமடைந்து மயிரிழையில் உயிர் பிழைத்திருந்தார்.

உதாரணத்துக்காக குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட மேற்படி நான்கு விபத்துக்கள் உட்பட, ஏ-9 பிரதான வீதியில் நிகழ்ந்த ஏராளமான கோர விபத்துக்களும் அதன் விளைவுகளும் அதிக வேகத்தால் ஏற்பட்டவையே என்பதைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள். அதனடிப் படையில் கீழ்வரும் விட யங்களை துரிதமாக செயற்படுத்துவது இந்தக் காலத்துக்குப் பொருத்தமாக இருக்குமென எதிர்பார்க்கிறேன்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும், நிறைவடையும் நேரங்களில் மட்டுமன்றி பாடசாலைகள் இயங்கு நிலையிலுள்ள நேரம் முழுமைக்கும் (குறிப்பாக பிரதான வீதிகளில் அமைந்துள்ள பாட சாலை களில்) போக்குவரத் துப் பொலிசார் கடமையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடு களை மேற்கொள்ளல். பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் வேகத் தடைகளை அமைத்தல். ஏ – 9 வீதியின் இருமருங்கிலும் பாதசாரிகளுக்கான நடை பாதையைக் குறிக்கும் வாகன வரையறைக் கோட்டிலிருந்து நடைபாதைக்கென சீமெந்து அல்லது கொங்கிறீற்றிலான பாதை அமைத்தல்.

கிளிநொச்சி மாவட்டத்தினுடைய பிரதான வர்த்தக மையமான டிப்போச் சந்தியில் சுற்றுவட்டம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பின், அதனடிப்படையிலேனும் டிப்போச்சந்தியை அண்மிக்கும் வாகனங்கள் தமது வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு மேற்படி விபத்துக்களையோ, அவற்றின் விளைவுகளையோ குறைத்திருக்க முடியும்.

டிப்போச் சந்தி என்பது கிளிநொச்சி சேவைச்சந்தை, கிளிநொச்சி மத்திய பஸ் நிலையம், பசுமைப்பூங்கா, கிளிநொச்சி மாவட்டத்தின் தாய்ப்பாடசாலையான கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை) ஆகியவற்றின் அமைவிட மையமாக உள்ளதோடு, கனகபுரம் வீதியின் இருமருங்கும் அமைந்துள்ள வங்கிகள், வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், யாழ்ப்பாணம், வவுனியா பகுதிகளிலிருந்து ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி நோக்கி வருகை தரும் வாகனங்கள் மற்றும் பொது மக்கள், இரத்தினபுரம், கனகபுரம் பகுதிகளிலிருந்து நகரை நோக்கி வருகைதரும் வாகனங்கள் மற்றும் மக்கள் தொகை என்பவற்றை எதிர்கொள்கின்ற பிரதான மையமாக அமைந் துள்ளதால், அப்பகுதியில் சுற்றுவட்டமும், வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான சமிக்ஞை விளக்குகளும் அமைக்கப்பட வேண்டும் என்று 2016-12-24 ஆம் திகதி எனது இணைத் தலைமையில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், கடந்த 2021-03-05 ஆம் திகதிய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் என்னால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதனடிப்படையில், மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி, பிரதம பொறியிலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கிளிநொச்சி அவர்களுக்கு 2017-02-03 ஆம் திகதிய கடிதமும், மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வடக்கு மாகாணம் அவர்களுக்கு 2018-08-05 ஆம் திகதி கடிதமும் என்னால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. எனினும் இதுவரை சுற்றுவட்டம் மற்றும் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப் பட்டனவாக அறிய முடியவில்லை.

மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட மக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் எதிர்கொள்ளும் போக்குவரத்து நெருக்கடிகளையும், அநியாயமாக நிகழ்ந்தேறும் விபத்துக்களூடான உயிரிழப்புக்கள் மற்றும் அவயவ இழப்புக்களையும் கருதி, இதுதொடர்பில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவனசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள், அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி தவிசாளர், கரைச்சிப் பிரதேசசபை – கிளிநொச்சி, பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் – கரைச்சி, மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை – வடக்கு மாகாணம், நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கிளிநொச்சி, பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் திணைக்களம் – இரணைமடு, முதன்மைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, தலைமைப் பொலிஸ் நிலையம் –கிளிநொச்சி, தலைவர் செயலாளர், வர்த்தகர் சங்கம் –கிளிநொச்சி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# கொவிட்டுக்கு எதிரான மாத்திரை இறக்குமதி; தனியார் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுப்பு

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான முதல் வாய்வழி வைரஸ் எதிர்ப்பு மாத்திரையான மோல்னுபிராவிரை இறக்குமதி செய்ய தனியார் துறையின் ஆர்வத்தை வெளிப்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.

பிரித்தானியாவின் மெர்க் நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் தயாரித்துள்ள கொரோனா வைரஸுக்கு எதிரான மோல்னுபிராவிர் மருந்தை இலங்கையில் பயன்படுத்துவதற்கான அனுமதியைக் கொரோனா தொழில்நுட்பக் குழு நவம்பர் 15 ஆம் திகதி வழங்கியது.

இந்த நிலையில், கொரோனா நோயாளர்களுக்கான சிகிச்சைக்காக சில தனியார் நிறுவனங்கள் அந்த மாத்திரையை இறக்குமதி செய்வதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன என மருந்துப் பொருள்கள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து, இந்த நிறுவனங்களை அவற்றின் விலைகளைக் குறிப்பிடும்படி தாங்கள் அழைப்பு விடுத்துள்ளோம் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர்கள் தயாரிப்பாளருடன் தங்கள் இணைப்பை ஆவண ஆதாரம் மூலம் நிறுவ வேண்டும் என்றும் அது முடிந்ததும் இந்த விடயத்தை மருந்து மதிப்பீட்டுக் குழுவின் அனுமதிக்கு அனுப்பிய பின்னர், இறக்குமதிக்கு அனுமதி வழங்க முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனவரி முதல் ஓட்டோக்கள் மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றம்!

## விரைவில் வர்த்தமானி

இலங்கையில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கட்டாய நடைமுறைக்கு வரும் திட்டம் தொடர்பில் அனைத்து ஓட்டோக்களின் சாரதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனைத்து ஓட்டோக்களும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றப்படுமென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஓட்டோக்களை மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றும் திட்டம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேல் மாகாணத்தில் நடைமுறைக்கு வரும்.

அத்துடன் 3 மாத காலப்பகுதிக்குள் நாட்டின் ஏனைய அனைத்து பிரதேசங்களிலும் இதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

மேலும், மீற்றர் இல்லாது வாடகை ஓட்டோக்களைச் செலுத்துவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2021இல் வெளியிடப்பெற்றது.